# பெரியார் பல்கலைக்கழகம்
# PERIYAR UNIVERSITY

State University – NAAC A++ Grade – NIRF Rank 94
State Public University Rank 40 – SDG Institutions Rank Band:11-50
SALEM - 636 011, TAMIL NADU

## விலைப்புள்ளி அறிவிப்பு

பெ.ப./தே.அ/CRE-II/09482/Window Covers/2025-13 நாள்: 14.11.2025

ஐயா,

பொருள்: பெரியார் பல்கலைக்கழக தேர்வாணையர் அலுவலக தொலைநிலைக் கல்வி தற்காலிக மற்றும் பட்டச்சான்றிதழ் பிரிவு மற்றும் உண்மைத்தன்மை பிரிவிற்கு பெரியார் பல்கலைக்கழக தொலைநிலை கல்வி மற்றும் இணையவழி கல்வி மையத்தில பயின்ற மாணாக்கர்களுக்கும் பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கு தற்காலிக மற்றும பட்டச்சான்றிதழ் உண்மைத்தன்மை கடிதம அனுப்புவதற்கு ஜன்னல் வடிவ உறைகள் கொள்முதல் செய்தல் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் - 1998 மற்றும் 2000 – ஆம் ஆண்டு விதிகளின்படி, விலைப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்தல் விலைப்புள்ளி கேட்பு – தொடர்பாக.

பார்வை: இதே எண்ணிட்ட இவ்வலுவலக் குறிப்பாணை நாள்: 06.11.2025.

******

தேர்வாணையர் அலுவலக, தொலைநிலைக் கல்வி தற்காலிக மற்றும் பட்டச்சான்றிதழ் பிரிவு மற்றும் உய்ணமைத்தன்மை பிரிவிற்கு ஜன்னல் வடிவ உறைகள் கொள்முதல் செய்தல் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன..

| Sl. No | Particulars | Qty | Rate (Per No) Rs. P. | Tax Applicable | Total Amount Rs.P. |
|---|---|---|---|---|---|
| 1. | Window Covers<br>Size :10 ½ x 2 ½" (95GSM) | 10,000 | | | |

**நிபந்தனைகள்:**

1. 21.11.2025 ஆம் தேதி அன்று மாலை 3 மணிக்குள் விலைப்புள்ளிகள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். அன்று மாலை 4 மணிக்கு விலைப்புள்ளிகள் திறக்கப்படும். காலதாமதமாகப் பெறப்படும் விலைப்புள்ளிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. தாங்கள் நிறுவன முகவரியிடப்பட்ட கடிதத்தில் மேலே கேட்கப்பட்டுள்ள பொருளுக்கு விலையை அளித்து இத்தத் தகவல் கடிதத்தின் நகலை இணைத்து அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் கேட்கப்பட்டிருப்பின் இதில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையின்படி விலை குறிப்பிட்டிருக்கவேண்டும்

3. விலைப்புள்ளிகள் ஒவ்வொரு பொருளின் தொகையும் பைசா விதத்தில் இல்லாமல் முழுத்தொகையாக (Round Figure) இருக்க வேண்டும். மேலும் மொத்த தொகை கண்டிப்பாக எண்ணிலும், எழுத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். பெரியார் பல்கலைக்கழக தேர்வாணையர் குறிப்பிடும் இடத்தில் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். விலைப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகையானது வண்டிச்சத்தம், புகை வண்டிச்சத்தம், கட்டுமானச் செலவு, காப்பீட்டுக் கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

4. விலைப்பட்டியலில் (Invoice/Bill GST வரி தனியே காண்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு இல்லையெனில் பட்டியல் தொகையில் வரி பிடித்தம் செய்யப்பட்டு மீதத் தொகை வழங்கப்படும்.

5. மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குத் தகுந்த உத்திரவாத காலத்தைக் குறிப்பிடவேண்டும்.

6. விலைப்புள்ளி உறையில் மேல் **''Window Covers'' விலைப்புள்ளி சமர்ப்பித்தல் கடித எண் .பெ.ப/தே.அ/CRE-II/09482/2025-13/25F130056'' சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள்: <u>21.11.2025.</u> என்று கண்டிப்பாக எழுதி தேர்வாணையர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -** 636 011 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

7. விலைப்புள்ளியில் எந்தவொரு திருத்தமும் இருக்கக்கூடாது அவ்வாறு திருத்தம் இருந்தால் அந்த இடத்தில் முறையான சான்றொப்பமிட வேண்டும்.

8. அனைத்துக் கடிதத் தொடர்புக்ளுக்கும் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எண் மற்றும் நாளைக் குறிப்பிட வேண்டும்.

9. குறிப்பிடப்படும் விலையின் மதிப்பு ஆறு மாத காலம் வரை செல்லத்தக்க இருக்க வேண்டும்.

10. TIN/PAN மற்றும; GST சான்று எண்கள் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

11. எந்தவொரு காரணத்திற்காகவும் எவ்வித முன்னறிவிப்புமின்றி விலைப்புள்ளியை இரத்து செய்வதற்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

12. தாங்கள் வழங்கும் உபகரணத்தின் Brand Name குறிப்பிடப்படவேண்டும்.

14.11.25

தேர்வாணையர்(பொ)

14/11/25

பெறுதல்: இயக்குநர் (இணையதளத்தில் விலைப்புள்ளிகள் அறிவிப்பினை வெளியிட)
கணினி மையம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 11.